<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 51/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1 |
| | | Defence |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : அப்பாஸ் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : சிராஜ்தீன் | ஜாதி | : | |
| கிராமம் | : | இனம் | : | |
| தாலூக்கா | : | வயது | : | |
| Mail ID | : | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 21.07.2022.

<u>**முதல் விசாரணை:**</u>

நான் உடுமலையில் வசித்து வருகிறேன். டிரைவர் வேலை செய்து வருகிறேன்.இந்த வழக்கில் இறந்து போன நண்பர் ஆவார். கடந்த 29.08.2020ம் தேதி காலை 11 மணிக்கு நான் உடுமலையில் இருந்து கணியூருக்கு கொடி ஏற்றுவதற்காக ஜீப்பில் நான், இறந்து போன அப்சர், மாலிக், சபீக், சாபீக் ஆகியோர்கள் போய் கொண்டிருந்த போது உடுமலை பழனி ரோட்டில் உள்ள சி.எம். டவர்ஸ் முன்பு நாங்கள் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்று கொண்டிருந்த போது எங்களுக்கு முன்னால் 10 அடி தூரத்தில் சென்று கொண்டிருந்த லாரி திடீரென பிரேக் போட்டு நின்றது. அப்போது எனது ஜீப்பில் இடது புறம் அம ்நிதருந்த அப்சரின் தலையில் முன்னால் நின்ற லாரியின் ஆங்கிள் பட்டு காயம் ஏற்பட்டது. மேற்படி விபத்தில் சபிபுல்லா, சாபி, மாலிக் ஆகியோருக்கு காயம் ஏற்பட்டது– நான் மேற்படி ஜீப்பை வலது புறமாக திருப்பிய போது மேற்படி நின்ற லாரியின் ஆங்கிள் பட்டு விபத்து ஏற்பட்டது. அந்த லாரியை ஓட்டியது ஆஜர் எதிரி தான். மேற்படி இறந்து போனவரை உடுமலை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். மருத்துவர்

இறந்துவிட்டதாக கூறினார். பின்பு உடுமலை காவல் நிலையத்தில் இது சம்மந்தமாக எழுத்து மூலமாக புகார் கொடுத்தேன் என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு போலீசார் பிரேத விசாரணையின் போது உடனிருந்து பிரேதத்தை அடையாளம் காட்டினேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**